தமிழ் வரிவடிவம்

இ.திருவள்ளுவன்

காலு
பிறை
விலங்கு
கீற்று
கொம்பு

இலக்குவனார் இலக்கிய இணையம்

தமிழ் வரி வடிவம்

இ. திருவள்ளுவன்

இலக்குவனார் இலக்கிய இணையம்

தமிழ் வரி வடிவம் ★ 1999 ★ இ. திருவள்ளுவன் ★ 10.00 வெண்பொற்காசுகள்

(ப) : தி. ஈழமலர், *ஈழக்கதிர் வெளியீட்டகம்*

கிடைக்குமிடம் : கமாகோன் அச்சிடுநர், *18, கச்சேரிச் சாலை, சென்னை - 4.*

நன்றி : தினமணி
இரண்டாவது அறிவியல் தமிழ்க் கருத்தரங்கக் கட்டுரைகள் 1989, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
இந்தியன் எக்சுபிரசு, மதுரை.

மாண்புமிகு தமிழக முதல்வரால்

என்றும் எதிலும் (கணினி வழி) தமிழ் நிலைக்கவும்
அறிவியல் பயனை அனைவரும் துய்க்கவும்.

24 & 25.1.2030 தி.பி. ★ 07 & 08.2.1999 கி.பி.

நாட்களில் கூட்டப் பெறும்.

உலகத் தமிழ்க் கணி இணையதர் கருத்தரங்க மாநாட்டில் விசைப் பலகை, கணியம் (சாப்ட்வேர்) குறிமுறை முதலியவற்றில் ஒருமையும், பொதுமையும் செம்மையும் காண உழைக்கும் ஆன்றோர்களுக்கும்

தமிழ் வரி வடிவத்தைச் சிதைவு
முயற்சிகளில் இருந்து காக்கும்
தமிழ்நலக் காவலர்களுக்கும்
இச்சுவடி படைக்கப்படுகின்றது.

தி. அன்புச் செல்வி
வெளியிடுநர்

அறிவியல் தமிழ் வளர்ச்சியில் எழுத்துச்சீர்மையின் பங்கு

இலக்கிய வளம்மிக்க தமிழ்மொழி இன்றைய அறிவியல் உலகிற்குத் தேவையான வளம் பெறவில்லையே என்பதுதான் நமக்குள்ள குறை. இக்குறை களைந்து அறிவியல் உலகில் வளம்பெற நாம் ஆற்றவேண்டுவன யாவை? வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது எது? சிலர் கூறுவதுபோல் தமிழின் வரிவடிவ அமைப்பு, தமிழ் வளர்ச்சிக்கு ஊறு செய்கிறதா? இல்லையா? அவ்வாறாயின் அறிவியல் தமிழ் வளர்ச்சியில் எழுத்துச்சீர்மையின் பங்குதான் என்ன? இவ்வினாக்களுக்கான விடையே இக்கட்டுரை.

தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் குறித்துக்கட்டுரைகளாகவும், நூற்களாகவும் பல்வேறு படைப்புகள் வெளிவந்துள்ளன. ஏன் எழுத்துச்சீர்திருத்தம் வேண்டும்? எவ்வாறு எழுத்துச்சீர்திருத்தம் இருக்கவேண்டும்? என்றெல்லாம் இவை இயம்புகின்றன. இவற்றின் பிழிவாக, எழுத்துச்சீர்திருத்தம் பற்றி ஆய்ந்து தமிழக அரசிற்குப் பரிந்துரைக்கும் தனிப்பட்ட ஆய்வுக்குழுவின் முடிவுகளைக் கருதலாம். இம்முடிவுகளின் அடிப்படையில், நாளும் நற்றமிழ்த் தொண்டாற்றிவரும் தினமணியின் 7.2.89, 18.2.89, 14.2.89 ஆம் நாளிதழ்களில், 'தமிழ் எழுத்துச்சீரமைப்பு – 1,2,3 என கட்டுரைகள் வந்துள்ளன. இவையும் இவற்றின் தொடர்ச்சியாக (தினமணியில்) இடம் பெற்ற கருத்துகளுமே இக்கட்டுரையின் களமாகும்.

'தமிழ்மக்கள் 21ஆம் நூற்றாண்டின் அறிவியல்யுகத்தில் அடியெடுத்து வைக்க தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் உதவும் ' என இவை உரைக்கின்றன.

'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'

என்பதற்கேற்ப, இவற்றுள் கூறும் கருத்துகள் குறித்து ஆராய்வோம்.

''எழுத்துச்சீர்திருத்தம் என்பது எழுத்துக்களைப் குறைப்பதன்று. 247 ஒலி எழுத்துகளை எழுதுவதற்குப் பயன்படுத்தும் குறியீடுகளைக் குறைப்பது., எவ்வளவுக்கெவ்வளவு எழுத்து அச்சுகள் குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு செலவும் குறைகிறது. எனவே தட்டெழுத்துப்பொறிக்கும் அச்சுப்பொறிக்கும் ஏற்றவகையில் அவற்றைச் சிறிது மாற்றியமைக்க முற்பட வேண்டும் .

உயிர்மெய்யெழுத்துக்களில், இகர . ஈகாரங்களிலும் உகர ஊகாரங்களிலும் உயிர்க்குறியீட்டைத் தனியே அமைக்கும் முறையை மேற்கொண்டால் 72 வடிவங்கள் குறைகின்றன''

இவையே பெரும்பாலும் வலியுறுத்தப்படும் கருத்துக்களாகும்.

இல்லாத நோய்க்கு மருந்து கூறுவதுபோல்தான் ஆய்வுக்குழுவின் கூற்றும் உள்ளது. ஏனெனில் தமிழ்த்தட்டச்சில், பெரும்பாலான உயிர்மெய்க்குறியீடுகள் தனியாகத்தான் அமைக்கப்பட்டுள்ளன. சற்று விளக்கமாய் இதனைக் காண்போம்.

கா. . . .னா ஆகிய 18 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ா ' என்ற தனிக்குறியீடு

கி . . . .னி ஆகிய 17 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ி ' என்ற தனிக்குறியீடு

கீ . . . .னீ ஆகிய 17 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ீ ' என்ற தனிக்குறியீடு

ஙு , பு , யு , வு ஆகிய 4 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ு ' என்ற தனிக்குறியீடு

ஙூ , பூ , யூ , வூ ஆகிய 4 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ூ ' என்ற தனிக்குறியீடு

ஹு , து , நு , லு , று , னு ஆகிய 6 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ு ' என்ற தனிக்குறியீடு

டு , மு , ரு , மூ , ளு ஆகிய 5 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ' என்ற தனிக்குறியீடு

கெ . . . . னெ ஆகிய 18 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ெ ' என்ற தனிக்குறியீடு

கே . . . . னே ஆகிய 18 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ே ' என்ற தனிக்குறியீடு

கை . . . . னை ஆகிய 18 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ' ை ' என்ற தனிக்குறியீடு

கொ . . . . னொ
கோ . . . . னோ
கௌ . . . . னௌ

ஆகிய 54 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு ஏற்கெனவே உள்ள குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

இவைபோல் க் – ன் ஆகிய மெய்யெழுத்துக்களுக்கு ' ் 'என்ற புள்ளி தனிக்குறியீடாக உள்ளது.

ஆக 197 எழுத்துவடிவங்களுக்கு 11 குறியீடுகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் பெரிதும் பேசப்பட்டுவரும். இகர, ஈகார, உகர, ஊகாரக்குறியீடுகள், ஓர் அச்சில் மேற்பாதியில் ஒன்றும் கீழ்ப்பாதியில் வேறொன்றுமாக அமைவதால், 4 அச்சுக்களில்தான் அமைந்துள்ளன. அதாவது 7 எழுத்து விசைகளைக்கொண்டே உருளையை நகர்த்தாமுறை மூலம், கூடுதலாக 197 எழுத்து வடிவங்களைத் தட்டச்சிடும்

உ

அறிவியல்முறையே உள்ளது. 247 எழுத்துகளுக்கும் 247 அச்சு உள்ளதாகக் கற்பனைசெய்து கொண்டு குறியீட்டுச்சீர்திருத்தம் பேசப்படுகிறது என்பதே உண்மையாகும்.

மேலும்,ஆங்கிலத்தட்டச்சப்பொறிக்கும் தமிழ்த்தட்டச்சப்பொறிக்கும் அமைப்பில் பெரிய அளவில் வேறுபாடு எதுவும் கிடையாது. அதனால்தான் ஆங்கிலத்தட்டச்சப்பொறியைத் தமிழ்த்தட்டச்சப்பொறியாக மாற்றமுடிகிறது.

அச்சு என்று எடுத்துக்கொண்டால்கூட

கா . . . னா
கெ . . . னெ
கே . . . னே   ஆகிய 126 உயிர்மெய்யெழுத்துக்களுக்கு
கை . . . னை   4குறியீடுகள்தாம் பயன்படுத்தப்படுகின்றன.
கொ . . . னொ
கோ . . . னோ
கௌ . . . னௌ

தட்டச்சு முறையைப் பின்பற்றி அச்சிலும் வடிவமைப்பு மேற்கொண்டால், மேலும் 7 பொதுவான குறியீடுகளைத் தனித்து அமைப்பதன்மூலம், நாம் தற்போது எழுதும் வடிவிலேயே மேலும் 72 எழுத்துக்களை அமைக்க முடியும். 'அச்சு எழுத்துக்களை வார்ப்போரிடம் கூறினால் இடுகுறிக்கும் உயிர்மெய்யெழுத்துக்கும் இடைவெளியில்லாதபடி இதைச் செய்துவிடமுடியும்' என்ற திரு ம.பொ.சி.யின் கருத்து (12.7.89 ஆம் நாள் தினமணி) இங்கு ஏற்கத்தக்கது.

மேலும் எவ்வாறு ஆங்கிலத்தட்டச்சிற்கும் தமிழ்த்தட்டச்சிற்கும் அமைப்பு முறையில் பெரிதும் வேறுபாடு இல்லையோ, அதேபோல ஆங்கிலக் கணிப்பொறியை ஒற்றித்தமிழ்க்கணிப்பொறியையும் அமைக்க இயலும். அதே முறையில் தொலையெழுதி போன்றவற்றையும் தமிழில் சிறப்பாக அமைக்க இயலும்.

எனவே பொறிகளைக் காரணமாகக் காட்டி எழுத்துச்சீர்திருத்தம் வேண்டும் என்பது, உண்மைநிலை என்னவென்றே அறிய முயற்சிக்காமலும், இயலக்கூடிய வாய்ப்புகளில் முனைப்புடன் இறங்காமலும், கூறுவதாகத்தான் உள்ளது.

கணிப்பொறியில் வடிவங்கள் இணைகோடுகளாகத்தான் அமையவேண்டும்' என்றும் ஒரு குறிப்பு தெரிவிக்கின்றது. புதுச்சீர்திருத்தத்தின்படி, 'மெய்யெழுத்துக்கு இடும் புள்ளியைத் தவிர' பிற முழுமையாக இணைகோடுகளுக்குள் அடங்கிவிடும் என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளது. எப்பொழுது இணைகோடுகளுக்குள் அடங்காத மெய்யெழுத்துப்புள்ளியைக் கணிப்பொறியில் அமைக்கமுடியுமோ அப்பொழுதே இணைகோடுகளுக்குள் அடங்காத பிற எழுத்துகளையும் அமைக்கமுடியும் என்பதே உண்மையாகும்.

மேலும் எழுதுகையில ஆங்கில எழுத்துகள் பல இணைகோடுகளுக்குள் அடங்காமல் மேலும் கீழும் செல்வனவாகத்தான் உள்ளன. அதுபோல் சப்பானிய 'கஞ்சி' இணைகோடுகளுக்குள் அடங்குவன அல்ல.

'வளராத மொழி என்று கூறிவரும் இந்தியில் இன்று தந்தி கொடுக்கலாம். தொலையெழுதியில் இந்தியில் செய்தியனுப்பலாம். ஆனால் தமிழில் தந்தி, தொலையெழுதி வசதியில்லை என்றும் குறை கூறப்பட்டுள்ளது.

கட்டுரையாசிரியரின் தமிழுணர்வை அறியாதவர்கள் இவற்றை மட்டும் படித்தால், எழுதியவரின் தமிழுணர்வையே ஐயப்படுவார்கள் எனில் மிகையாகாது. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிறதோ? தமிழில் தந்தி, தொலையெழுதி வசதிகள் இல்லையே என்று குறைபடுவதுபோல்காட்டி, இதற்குகூடத் தகுதியற்ற தமிழைக்கட்டி ஆள்கிறோமே என்று சுட்டிக்காட்டுகிறார்களோ? என்றெல்லாம் எண்ணம் எழுவது இயற்கைதான். ஆனால் இவர்களும் தமிழ்ப்பற்றிலும் தமிழறிவிலும் யாருக்கும் இளைத்தவர்கள் இல்லைதாம். தாம் கொண்டுள்ள தவறான கருத்தை நிலைநாட்ட வழியின்றித்தவறான் வழியில் வெளிப்படுத்துகிறார்கள் என்பதே உண்மையாகும்.

' தந்தி ', தொலையெழுதி ஆகியவற்றில் தமிழ் பயன்படுத்தாதற்கு தமிழில் எழுத்துக்குறைபாடு காரணமில்லை என்று திரு பா. இறையரசன் (26.7.89 தினமணி) குறிப்பிட்டுள்ள செய்தி உலகறிந்த உண்மையே. இதனை மறைக்கலாமா? அன்னார் குறிப்பிட்டுள்ளதுபோல், பலர் தமிழில் தந்தி அனுப்பும் முறையை கண்டுபிடித்திருந்தும், கண்காட்சிகளில் பார்வையில் வைத்தும், நூல்கள் எழுதியும் விளம்பரப்படுத்தியும்கூட, நடுவண்அரசின் தவறான மொழிக்கொள்கையும் வெற்றி காண்பதில் நம்மிடையே உள்ள முனைப்பற்ற போக்கும்தான் தமிழில் தந்தி வசதியில்லாததற்குக் காரணமாகும். அன்னார் சுட்டியவாறு தமிழில் கணிப்பொறி உருவாக்கப்பட்டுள்ளது. அதனை நடைமுறைபடுத்தாமல், நாமாக முட்டுக்கட்டைகளைக் கற்பனை செய்துகொண்டு அல்லல்படுவானேன். இதே முறைகளில் தொலையெழுதி, தொலையச்சு ஆகியவற்றையும் உருவாக்கலாம் என்பதுதானே உண்மை?

சு

ஆகத்தமிழில் இவ்வசதிகள் அளிப்பதற்கு தற்போதைய தமிழ் வரிவடிவம் தடையில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இரு மொழித்தட்டச்சு, இருமொழி தொலையெழுதி ஆகியவை இந்தியில் (இந்தி ஆங்கிலம் என) இருப்பதாயும் தமிழின் வரிவடிவக்குறைபாட்டால் அவ்வாறு இல்லை என்றும் மீண்டும் குறைகூறப்பட்டுள்ளது.

தமிழ், ஆங்கில இருமொழித் தட்டச்சும்,தமிழ், ஆங்கிலம், இந்தி என மும்மொழித் தட்டச்சும் உள்ளன. பயன்படுத்துவாரின்றி இவை இன்னும் பரவலான விற்பனைக்கு வரவில்லை அவ்வளவுதான், இதே முறைகளைப்பின்பற்றி, தமிழ், ஆங்கிலம் இருமொழி தொலையெழுதியையும் தமிழ் உள்ளிட்ட மும்மொழிப் பொறிகளையும் அமைக்கமுடியும். எனவே தமிழ் வரிவடிவம், இதுபோன்ற பொறிகளை அமைக்கத் தடையாக உள்ளது என்பது கற்பனையான காரணமாகும்.

மேலும் குழந்தைகள், தமிழ்கற்கும்முன் எத்தனை எழுத்துகள் என்றுகேட்டு மலைத்துப்போய்ப் படிக்காததுபோலும், அல்லது படிக்கையில் தமிழ்வரிவடிவம் எளிதாக இல்லை என்றுகூறி இடையில் நிறுத்திவிடுவதுபோலும், 'குழந்தைகள் கற்பதற்குச் சுமையாக இருப்பதாகவும், குறியீடுகளை மாற்றியமைத்தால், வரிவடிவ எளிமை காரணமாக மற்றமொழிகளைவிடத் தமிழ் அதிகமானவர்களால் கற்கப்படுவது சாத்தியமாகும் என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

'...குழந்தைகள் தமிழ் எழுத்துகளைக் கற்பதற்குத் தொல்லைப்படுகிறார்கள் என்பது வெறும் கற்பனை நிறைந்த நகைச்சுவையாகும் ' எனத் திரு ஆ. கருப்பையா (13.3.89 ஆம் நாள் தினமணி) கூறியதுபோல், இக்கருத்தை எள்ளி நகையாடுவதைத்தவிர வேறுவழியில்லை.

ஆங்கில வரிவடிவத்தோடு ஒப்பிட்டும் மாற்றம் பேசப்படுகிறது. ஆங்கில மொழிக்கு மொத்த வரிவடிவம் 26 தான் என்றுகூறும் எழுத்துச்சீர்திருத்த நோக்காளர்கள், 26 ஆங்கில ஒலிவடிவத்தை நான்கு வெவ்வேறு முறைகளில் 26x4 என எழுதிக்கற்க வேண்டியுள்ளதை அறியாதவர்களா என்ன? அறியாதவர்களை உணர்த்தலாம். அறிந்தும் மறைப்பவர்களுக்கு மறுமொழியால் என்ன பயன் விளையப்போகிறது?

சப்போனிய மொழியில் ஆயிரக்கணக்கான எழுத்துகள் உள்ளன. அவர்களால் அறிவியலில் முன்னேற்றம் காணமுடியும்போது நம்மால் முடியாதா? என்று கேட்பவர்களின் வாயடைக்க ' முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் ' பார்த்துள்ளனர். சப்பானியமொழியிலேயே

எழுத்துச்சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும்போது நமக்கும் வேறுவழியில்லை என்று மாயையை ஏற்படுத்தி உண்மைக்குச் சாவுமணி ஒலிக்க முயற்சி நடைபெறுகிறது.

சப்பானிய வரிவடிவமான 'கஞ்சி ' என்னும் படஎழுத்துகள் சீனமொழியில் இருந்துவந்தவைதாம். இருமொழிகளிலும் வரிவடிவும் பொருள்வடிவும் ஒன்றாகஇருப்பினும், ஒலிவடிவம் வெவ்வேறாகத்தான் உள்ளன). [கன்(ஞ்)சி என்றால் சீனஎழுத்துகள் என்றுதாம் பொருள்] இருப்பினும் இவை சப்பானிய வரிவடிவங்களாகவே மதிக்கப்படுகின்றன. இவற்றில் இருந்துதாம் ' இரங்கன', 'கதகன' வடிவங்கள் அமைந்தன. 'கஞ்சியுடன்' சேர்த்து எழுத 'இரங்கன' பயன்படுத்தப்படும். அயல்மொழிச்சொற்களைப்போலவே சப்பானிய உச்சரிப்பில் எழுதக் கதகன பயன்படுத்தப்படும். (எடுத்துக்காட்டாக 'இந்தியா' என்பதை 'இந்தோ' என கதகனவில் எழுதுவர்)

'கஞ்சி ' பல்லாயிரக்கணக்காக இருப்பினும், தொடக்கநிலை, இளநிலை, உயர்நிலை, முதுநிலைக்கேற்ப எண்ணிக்கையை வரையறை செய்து ஒழுங்குபடுத்தியுளளனர். இதன்படிக் கற்றறிந்த ஒருவர் இயல்பாய்த் தெரிந்திருக்கவேண்டிய 'கஞ்சி 'அளவு 1850 என வரையறை செய்யப்பட்டுள்ளது. இவை எழுத்துகள் அல்ல சொற்கள் என்பதையும் ஒவ்வொரு கஞ்சியும் பல்வேறுபொருட்களில் வழங்கப்படுகிறது என்பதையும் நினைவுகொண்டால், நாம், ஒவ்வொருவகுப்பிலும் அறிந்திருக்கவேண்டிய சொற்திரட்டை வரையறை செய்வதுபோல்தான் இவையும் எனப்புரியும்.

சப்பானிய தட்டச்சில் 1850 கஞ்சிகளும் இரங்கன, கதகன எழுத்துகளும், கூட்டல், கழித்தல் போன்ற அடையாளங்களுமாக 351 ம் சேர்ந்து ஆக மொத்தம் 2201 வடிவங்கள் இயல்நிலையில் உள்ளன. இவைதவிரத் தனியாக இணைப்புநிலை–1 இல் 858 கஞ்சிகளும், இணைப்புநிலை–2 இல் 2297 கஞ்சிகளும் (ஆக மொத்தம் 5356) உள்ளன.

தமிழ்த்தட்டச்சில் 46 அச்சுகள் இருப்பதற்கே நம்மில் சிலர் சீர்திருத்தம் என்ற பெயரில் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் சப்பானியர்கள், தட்டச்சில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட அச்சுகள் இருப்பினும், எழுத்துகளைத் தம்பொறிக்கேற்ப அழித்தொழிக்க எண்ணவில்லை. மாறாக அறிவியல் ஆய்வில் முனைந்து கணியச்சை உருவாக்கிக்கொண்டார்கள். ஆகத்தட்டச்சிற்கோ, கணியச்சிற்கோ, கணிப்பொறிக்கோ, அச்செழுதிக்கோ, தொலையெழுதிக்கோ எழுத்துகளின் எண்ணிக்கையோ வடிவமோ தடையில்லை என்பதே உண்மையாகும். தேவைதான் அறிவியலின்தாய் என்பதுபோல் எழுத்துகளின் எண்ணிக்கைதாம் மேன்மேலும் அறிவியலில் முன்னேற வழிவகுத்துள்ளது என்று கூறினாலும் தவறில்லை.

எனவே சப்பானிய வரிவடிவங்கள் அவ்வளவு ஏற்றதாகயில்லை. குறைத்துவிட்டார்கள் என்பது முழுமையானத் தகவலறியாமல், தானும் குழம்பிப்போய்ப் பிறரையும் குழப்புவதாகத்தான் உள்ளது.

மேலும் எழுதும் முறையை மாற்றுவது என்பது ஒன்றும் பெரும்சீர்திருத்தம் அல்ல. இன்னும் சப்பானியருக்கே உள்ள நூல்களும் இதழ்களும் வலமிருந்து தொடங்கி மேலிருந்து கீழாகச் செங்குத்தாகத்தான் எழுதப்படுகின்றன. அயல்மாணவர்களுக்கான பதிப்புகள் மட்டுமே படுக்கையாக இடமிருந்து வலமாக எழுதப்படுகின்றன. அயல்மாணவரும் சப்பானிய மொழியில் தேர்ச்சி பெற்றதாகக் காட்ட விரும்பினால் சப்பானியமுறையில்தான் எழுதவேண்டும்.

ஒருவர் அன்றாடப் பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் சிலவற்றைப் பரணில் எடுத்துவைப்பதை எடுத்துக்காட்டாகக்கூறி மற்றொருவரிடம் அவருக்கு இன்றியமையாதப் பொருட்களைத் தூக்கிக் குப்பைத்தொட்டியில் வீசச் சொல்வதுபோல்தான் பிறமொழிகளை எடுத்துக்காட்டாகக் கூறுவதைக் கருதவேண்டியுள்ளது.

முடவன் ஊன்றுகோலைப் பயன்படுத்தி நன்கு நடப்பதாகக்கூறி, ஊனமற்றவனையும் ஊன்றுகோல் பயன்படுத்தப் பரிந்துரைக்கும் அறியாமையை என்னென்பது? இதுபோலத்தான் ' அங்கே பார் . . . இங்கே பார் ' என்று எங்கெங்கோ பார்க்கக்கூறி, அதற்கான சூழலைப்புரிந்துகொள்ளாமல். இங்கே ' சீர்மை ' என்ற பெயரில் 'சிதைவை ' வேண்டுவது.

1969 இல் அமைக்கப்பட்ட மலையாளச் சீர்திருத்தக்குழுவின்படி, மலையாள மொழியில் எழுத்துச்சீர்திருத்தம் நடைபெற்றதும் மேற்கோளாகக் காட்டப்படுகிறது. அப்படியானால் எழுத்துச்சீர்திருத்தம் மேற்கொண்டதும் மலையாள உலகு - கணிப்பொறி போன்றவற்றில் கரைகண்டுவிட்டதா? அறிவியல் உலகில் அரியணையில் ஏறிவிட்டதா? இல்லையே! அப்படியானால் எழுத்துவடிவச் சீர்மைக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் தொடர்பில்லை என்பது உண்மைதானே, ஏன் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட முயலவேண்டும்?

அடுத்து 1987 இல் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 46% எனறும், 100% கல்வியறிவிற்குத் தடைச்சுவர் வரிவடிவம்தான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

சப்பானிய மக்கள் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே 100% கல்வி கற்றவர்களாக விளங்கியமைக்கு, அவர்களின் பல்லாயிரக்கணக்கான *சிக்கலான வரிவடிவம் தடையாயில்லை.*

சீனாவில் கல்லாமையை விரட்டி, ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும் கற்றுத்தரவேண்டும் என்று இயக்கத்தை நடத்திக்காட்டி வென்றமைக்கு அவர்களின் பல்லாயிரக்கணக்கான வரிவடிவம் தடையாய் இல்லை.

ஆனால் புள்ளிவிவரம் ஒன்றைத் தவறான முறையில் கையாண்டு தமிழ்நாட்டில் கல்வியறிவன்மைக்குக் காரணம் தமிழ் வரிவடிவம்தான் என்று திரித்துக் கூறுவது என்னென்பது? இவர்களின் தமிழ்நல விழைவில் ஐயப்படாவிட்டால் தவறான முடிவிற்கேற்ப தம் கற்பனையை வலிந்து மெய்போல் காட்டமுற்படுவதாக எண்ணலாம் அல்லவா? திரு க.சி.அகமுடைநம்பி (13.3.89 ஆம் தினமணியில்) தெரிவித்துள்ளதுபோல் மாற்றியே ஆகவேண்டும் என்று வரிந்துகட்டிக்கொண்டிராமல் இன்றையநிலையில் தமிழ்வளர்ச்சிக்கான மெய்யான தேவைகள் குறித்து இவ்வறிஞர்கள் எண்ணிச் செயல்படமுன்வரவேண்டும்.

கல்வெட்டுகளில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களும் குறிப்பிடப்பட்டன. கல்லெட்டு வரிவடிவம், உண்மை வரிவடிவத்தில் இருந்து விலகியிருந்த உண்மையை உணராமல் இங்ஙனம் கூறப்படுகிறது.

ஆசிரியருரையில் (13.3.89 ஆம் தினமணியில்)' கட்டுரையைப் பற்றி 101 மடல்கள் வந்தன. 8 மடல்கள் மட்டுமே எழுத்துச்சீர்திருத்தத்தை எதிர்ப்பதாக உள்ளது' என்று கூறப்பட்டுள்ளது.

எண்ணிக்கை மட்டுமே ஒன்றைப்பற்றி முடிவுகட்டப் போதுமானதல்ல என்பது ஒருபுறமிருக்க, மற்றோர் உண்மையையும் எண்ணிப்பார்க்கவேண்டும். எந்த ஓர் இதழுக்கும் அந்த இதழ் சார்ந்துள்ள கருத்துக்கேற்பவே மடல்கள் மிகுதியாக வந்துசேரும். ' இப்படி . . .இப்படி ' எழுதினால்தான் அச்சிடுவார்கள் என்றுகருதி அதற்கேற்ப எழுதுவோரும் உண்டு. இக்கட்டுரைகள் தொடர்பாக எதிரான கருத்து கொண்டிருந்த நண்பர்களிடம் மறுப்பினை தினமணிக்கு அனுப்பினால் என்ன என்று கேட்டுள்ளேன். மாறுபட்ட கருத்தினை வெளியிடமாட்டார்கள் என்றுகருதியே அனுப்பவில்லை என்றனர். மாண்புமிகு கல்வியமைச்சரின் எழுத்துச்சீர்திருத்தம் பற்றிய அறிக்கை குறித்து அன்னாரின் சார்பாளராகக் கருதிக்கொண்டு வெளியிட்டகட்டுரைக்கு (நண்பர்களின் கருத்தைப் பொய்யாக்க எண்ணி) மறுப்புரை அனுப்பினேன்.

சுருக்கமாக ஓரிரு வரிகள்கூட வரவில்லை. ஆகவே நடுநிலை எனக் காட்டுவதற்காக ஓரிருவரின் மடல்களை வெளியிடலாமே தவிர மறுப்புமொழிகளைக் கருதிப் பார்க்கமாட்டார்கள் என்று எண்ணியே பலர் மடல அனுப்பியிருக்கமாட்டார்கள். ஆகவே இந்த எண்ணிக்கை ஓர் அளவுகோலன்று. மேலும் இலட்சக்கணக்கான வாசகர்கள் உள்ள தினமணிக்கு இக்கட்டுரைகளை வரவேற்று 100 மடல்கள்கூட வரவில்லை

அ

என்னும்போது, எழுதாத இலட்சக்கணக்கானோர் இதற்கு எதிராக இருக்கிறார்கள் என்றுகூட எடுத்துக்கொள்ளலாமே.

மேலும், எப்படி வாழவேண்டும் என்று வதைபட்டுப்கொண்டிருக்கும் மக்களிடம் எப்படி எழுதவேண்டும் என்று கதைத்துக்கொண்டிருப்பது குறித்து திரு ப.சண்முகம் (12.6.89 ஆம் நாள் தினமணி) வருத்தப்படுவதை உணர்ந்துபார்க்கவேண்டும். இதற்கேற்ப அறிஞர் வா.செ.குழந்தைசாமி அவர்களும் வளர்ந்த இனத்தின் மொழிகள் எங்கோ இருக்கின்றன என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகிறார். ஆக 'நாம் வாழ்வாங்கு வாழ்ந்தால் நம் மொழியும் வாழும். நம்மொழியைப் பொறுத்தது அல்ல நம் வாழ்க்கை' என்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மறந்துவிட்டு, நாம் வாழவேண்டிய வழிவகைகளை ஆராயாமல், மொழியைச் சிதைக்க வழிகாணுவானேன்?

மாண்புமிகு முதல்வர் அவர்கள், குழந்தைகளை வளர்க்கையிலேயே, தமிழில் எண்ணும்படி வளர்க்கவேண்டும் என்றார். எடுத்துக்காட்டாக, முதலில் ரேடியோ என்பதை பதிவுச்செய்து, ரேடியோ என்றால் வானொலி என்று மாற்ற முயலுவதைவிட வானொலி என்று தமிழில் முதலில் எண்ணுமாறு வளர்க்கவேண்டினார். (பின் வேண்டுமானால், அயல்மொழிச்சொல்லை அறியவைக்கலாம்.) அதற்கேற்ப மழலை வகுப்பிலேயே 'மின்கலம்,தண்கலம்,உண்கலம், பேருந்து, மகிழுந்து, சீருந்து, சிற்றுந்து,சுமையுந்து, உதையுந்து, வானொலி, வானொளி என அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி 'எண்ணுக தமிழில் ' என்பதைச் செயல்படுத்தவேண்டும்.

அன்றாடப் பயன்படுபொருட்களை மழலை நிலையில் கற்றுத்தந்தபின் அடுத்த நிலையில், அறிவியல் கலைச்சொற்களைக் கட்டுரை வடிவில் பெரும்பரவலாகக் கற்றுத்தரவேண்டும். எடுத்துக்காட்டாக மழலைநிலையில் மகிழுந்தை அறிந்த மாணாக்கர், வளர்நிலையில் இன்றியமையாத உறுப்புக்களை அறியச்செய்தல் வேண்டும். தரமான தமிழ்வழிக்கல்வி எங்கும் கிடைக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். பல்கலைகழகங்கள் அஞ்சல்வழி முறையிலும் முறைசாராத்திட்டத்திலும் தமிழ்வழிக்கல்விக்கு மட்டுமே இடந்தரவேண்டும். ஆட்சிமொழி, கல்விமொழி, வேலைவாய்ப்புத்தகுதி மொழியாகத் தமிழை ஆக்க அறிஞர்களும் வல்லுநர்களும் கூறுவனவற்றை ஏட்டளவில் நிறுத்தாமல், செயல்வடிவில் நிறைவேற்றுதல் வேண்டும்.தொலைவரி முதலானவை தமிழில் அனுப்ப ஆவன செய்யவேண்டும். அதற்கு முதற்கட்டமாக உடனடியாக, வெறும் எண்களைத் தெரிவித்து அனுப்பும் வாழ்த்துத்தந்திச் செய்திகளைத் தமிழில் தருதல்வேண்டும்.* தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் வேண்டும். அயல்மொழி எனில் பன்மடங்குக் கட்டணம் பெறவேண்டும்.

---

* இப்போது இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

தேசிய ஒளிபரப்பில் நாளொன்றுக்கு இருமொழி என 14 மொழிகளிலும் ஒளிபரப்பு இருத்தல்வேண்டும். சப்பான்நாட்டு முறையை அடியொற்றி ஒரே ஒளிபரப்பிற்கு அனைத்துமொழி ஒலிபரப்பும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இவற்றை எல்லாம் விட்டுவிட்டு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினால் அறிவியல் உலகில் முன்னேறுவோம் என்போர், தவறான எடுத்துக்காட்டுகளைக் கூறியும், தொடர்பில்லாத தெரியாத செய்திகளைக் கூறி மலைக்கச்செய்தும், எழுத்துச்சீர்திருத்தம் இல்லாவிட்டால், புதைகுழியில் வீழ்ந்துவிடுவோம் என்ற மாயையை உருவாக்கிக்காட்டியும், ' எழுத்துச்சீர்மை ' என்ற பெயரில் மொழிச்சிதைவிற்கே வழிகாண முயலுகிறார்கள். அவர்கள் தமிழ் அறிஞர்கள் அல்லர் என்றோ மரபினைச் சிதைப்பவர்கள் என்றோ தமிழ்மொழிக்கும் தமிழினத்துக்கும் பகைவர்கள் என்றோ கூறவில்லை. மாறாக நாம் அறிவியல் உலகில் முன்னேறவேண்டும் என்ற ஆர்வத்தில் தமிழில் எழுத்து வடிவங்களை மாற்றியமைத்தால், உடனே கணிப்பொறியுலகில் தலைமக்களாக விளங்குவோம் என்ற கானல்நீர்க்கனவுகளில் மூழ்கி, மயக்குமொழிகளால் பிறரைப் புதைகுழிக்குள் தள்ளப்பார்க்கிறார்கள். கனவில் உள்ளதால், தமிழ்நாடு இந்தியாவின் ஒருபகுதியாக உள்ளதை மறந்துவிடுகிறார்கள். இந்தியா வல்லரசுகளுக்கு இணையாக அறிவியல் உலகில் காலடி எடுத்து வைத்துள்ளதையும் காணத்தவறுகிறார்கள். அறிவியலின் பயன் அனைவருக்கும் கிடைப்பதும் இந்தியாவின் அனைத்துமொழிகளிலும் அறிவியல்துறை வளருவதும், இந்திய அரசின் கொள்கையைப் பொறுத்தே என்பதை உணர, அவர்கள் விழித்தெழுவார்களாக. அறிவியல் தமிழ்வளர்ச்சியில் எழுத்துச்சீர்மையின் பங்கு ஒன்றும் இல்லை என்பதை உணருவார்களாக. தம் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் மொழிச்சிதைவுப்பாதையில் இருந்து திருப்பி, அறிவியல் வளர்ச்சிப்பாதையில் செலுத்துவார்களாக. இதற்கான தகுதியும் திறமையும் உடைய அறிஞர்களிடம் இதைத்தான் எதிர்பார்க்கின்றோம். நம் எதிர்பார்ப்பு ஏமாற்றம் தராதிருக்க நாமும் ஒத்துழைப்போம்.

> ***கெடல் எங்கே தமிழின்நலம் அங்கெல்லாம்***
> ***தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!***
>
> **- பாவேந்தர்பாரதிதாசன்**

ம

அனுப்ப மறந்த அஞ்சல்

(தினமணியில் மேலும் பல கட்டுரைகள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து வந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கதாக 22.08.98 ஆம் நாள் தினமணியில் வந்த 'தமிழ் வரி வடிவச் சீரமைப்பு' என்னும் கட்டுரையைக் கூறலாம். இக்கட்டுரை பற்றிய எண்ண ஓட்டம் அஞ்சல் பெட்டியில் சேர்க்கப்படவில்லை. எனினும், தமிழ் அன்பர்களின் எண்ணப் பெட்டியில் சேர்க்க இங்கே வெளியிடப்படுகிறது)

சீரமைப்பா? சீரழிவா?

மருத்துவம், பொறியியல் முதலிய பிற துறைகளைச் சேர்ந்தோர் தமிழில் ஆர்வம் கொண்டிருப்பின் தத்தம் துறை சார்ந்த படைப்புகளைத் தமிழில் அளிக்க முன்வரவேண்டும். புதிய கலைச் சொற்களை உருவாக்க வேண்டும். உருவாக்கப்பட்ட கலைச் சொற்களைப் பயன்படுத்திக் கட்டுரைகளையும், நூல்களையும் வெளியிட வேண்டும். ஆனால், பாடல் எழுதியும், பேசியும் நாடறிந்தவர்களாகத் திகழ்ந்து தான் சார்ந்துள்ள துறையில் தமிழுக்கு வளம் சேர்த்துத் தொண்டாற்றாதவர்கள் (துறை வல்லுநர்களாயினும்) தமிழ் அறிஞர்களே இல்லை. ஆனால், இத்தகையோரின் கருத்துகளுக்கு இதழ்கள் முதன்மை கொடுப்பதாலும் இதன் அடிப்படையில் அரசு சிறப்பிடம் தர நேர்வதாலும், இவர்களின் தவறான கருத்துகள் தமிழ் அறிஞர்கள் என்ற தவறான நோக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு தமிழைச் சிதைப்பதாக அமைகின்றன. உண்மையில் தத்தம் துறைகளில் தமிழுக்குத் தொண்டாற்றும் அறிவியல் புலவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு குறுக்கே நிற்பதில்லை. செல்வாக்கினாலும், சொல்வாக்கினாலும் பெயர் பெறுவோரே தமிழுக்கு ஆக்கம் தருவதாகக் கூறிக் கொண்டு தமிழை மேலும் அழிவு நோக்கில் செலுத்துகின்றனர். இதுபோல் மற்றொருபுறம் தமிழினம் என இன நோக்கில் முதன்மை அளித்து மொழி நோக்கில் எதிராய்க் கூறுபவரும் உள்ளனர். பகுத்தறிவு என்ற பெயரில் சிலவகை மூட நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் இவர்களும் அறிந்தும் அறியாமலும்

தமிழுக்கு எதிரானச் செயல்களைச் செம்மையாகவும் செறிவாகவும் செய்து வருகின்றனர். இவ்விரு சாராரின் அழிவுப் பணிகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றுதான் தமிழ் வரி வடிவச் சீரமைப்பு என்னும் புற்று நோயாகும். உயர் தமிழ் மொழி தனக்குரிய நிலையை எட்ட வேண்டும் என விழையும் தமிழ் ஆர்வலர்கள் இந்நோய்க்குப் பலியாவது தொடர்ந்து கொண்டிருப்பதால் இனியேனும் விழிப்பாக இருக்க வேண்டும்.

22.08.98 தினமணியில் 'தமிழ் வரி வடிவச் சீரமைப்பு' என்னும் கட்டுரை வந்துள்ளது. கட்டுரையாளர் இதே கருத்தைத் தினமணியில் பலமுறை எழுதி வந்துள்ளார். இவற்றிற்கெல்லாம் உரிய மறுப்புகளை அவ்வப்பொழுது தெரிவித்தும் தினமணி இதழ் வெளியிட்டதில்லை. இப்போதைய ஆசிரியர் சுருக்கியாவதுவெளியிடுவார் என்ற நம்பிக்கையில் உள்ளபடியான கருத்து உள்ளபடியே தெரிவிப்பது கடமை எனக் கொண்டு சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

வரி வடிவச் சீரமைப்பு தேவை எனத் தவறாய் தெரிவிக்கும் இக்கட்டுரையில் பின்வருவன அடிப்படைக் குறிப்புகளாய் அமைந்துள்ளன.

''உயிர் மெய்க் குறியீடுகள் 72. இவற்றைத் தனித்தனியாய் மனப்பாடம் செய்ய வேண்டும். உயிர் மெய் 'உகர' 'ஊகாரத்தில்' சீர்மை இல்லை. (கி, கீ,..... கு, கூ...) நான்கு வரிசையில் மட்டும் குறியீடுகள் எழுத்தோடு ஒன்றி நிற்கின்றன. இவை இணைகோடுகளுக்குள் அடங்கா. தமிழ் கற்பதை எளிதாக்குவதற்கு முதற்படியாக தமிழ் வரி வடிவம் எளிதாக்கப்பட வேண்டும்''

இவை அனைத்துமே தவறு. தட்டச்சிற்காகவும், அச்சிற்காகவும் வரி வடிவச் சீரமைப்பு தேவை என்று முன்பெல்லாம் கூறியிருந்த கட்டுரையாளர் இக்கட்டுரையில் அதுபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. கணினி அச்சு வந்தபின் இவ்வாறான சிக்கல் எதுவுமே இல்லை என்பதை உணர்ந்ததன் விளைவே இது. அவ்வாறு உணர்ந்தாலும், தவறான வாதங்களின் அடிப்படையில், கையெழுத்து முறைக்காக எழுத்துச் சீர்திருத்தம் தேவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், உண்மையில் தமிழ் வரி வடிவ அமைப்பு அறிவியல் முறையில் சீராய் அமைந்த ஒன்றாகும். மேலும், குறியீடுகளை யாரும் மனப்பாடம் செய்து கொண்டிருப்பதில்லை. பயிற்சியால் பெறும்

அறிவு இது. பள்ளிக்குச் சென்றபின் வரி வடிவம் சீராய் இல்லை எனக் கல்வியை நிறுத்தியவர் யாரும் கிடையாது. அறியாமை, கல்லாமைக்கான காரணங்கள் அனைவரும் அறிந்தனவே. அத்துடன் பிற மாநிலங்களில் வாழ்பவர்கள் தமிழை மறப்பதற்குக் காரணம் தமிழ் வரி வடிவ அமைப்பு அன்று. தமிழ்நாட்டில், தமிழே அறியாமல் பயிலவும், வணிகம் மேற்கொள்ளவும், வாழவும் இயலும். ஆனால், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளைத் தெரிந்திருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அத்துடன் 'இந்தி'யமாயையால் இந்தியையும், உலகத் தொடர்பு என்ற நம்பிக்கையால் ஆங்கிலத்தையும் கற்கின்றனர்.' தமிழ் நாட்டிலே கூட தேவைப்படாத தமிழை, தாம் வாழும் மாநிலத்தில் கற்பதைச் சுமையாகக் கருதுகின்றார்கள். அரசு உரிய நடவடிக்கை எடுத்தால் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ் அறியாதவர்களும் தமிழ் கற்க வகை செய்ய இயலும். எனவே, 'பிற மாநிலத் தமிழர்கள் தமிழ் கற்காததன் காரணம் தமிழ் வரி வடிவ அமைப்பு அன்று. ஆனால், நாம் வாளாவிருந்துவிட்டால், கட்டுரையாளர் நாளைக்கு ஆங்கிலேயர் ஆங்கிலம் பயில்வதற்கும், சீனர்கள் சீனம் பயில்வதற்கும் காரணம் தமிழ் வரி வடிவ அமைப்பினால் தமிழைப் படிக்க முடியாமல் போனதுதான்' என்று குழப்பினாலும் குழப்புவார்.

தமிழ் உயிர் மெய்க் குறியீடுகள் சீரான முறையைப் பின்பற்றித்தான் அமைக்கப்பட்டுள்ளன.

'அ' வரிசைக்கு	-	எழுத்தின் பின்
இ, ஈ, உ. ஊ வரிசைகளுக்கு	-	எழுத்துடன் இணைந்து
எ, ஏ, ஐ வரிசைகளுக்கு	-	எழுத்தின் முன்
ஒ, ஓ, ஔ வரிசைகளுக்கு	-	எழுத்தின் முன்னும் பின்னும்

இவ்வாறு உயிர் மெய்க் குறியீடுகள் எழுத்தை நடுவாகக் கொண்டு முன், பின், முன்பின், இணைந்து என்ற முறையில் அமைந்துள்ளன எனலாம். அனைத்துக் குறியீடுகளும் முன் அல்லது பின் என்பது போல் ஒரே முறையில் அமையாமைக்குக் காரணம் ஒவ்வொரு குறியீடும் எழுதும் பாங்கிற்கேற்ப இயல்பாய் அமைந்துள்ளதே.

இவற்றின் அடிப்படையில் குறியீடுகள் அமையும்பொழுது இன்றைக்கு நாம் 'சீர்திருத்த எழுத்து' என்றும், 'பெரியார் எழுத்து' என்றும் கூறி என்ன வகையில் எழுதுகின்றோமோ அவ்வாறுதான் தொடக்கத்திலும் அமைந்திருக்க வேண்டும். குறியீட்டின் தொடர்ச்சிபோல் அமைந்துள்ள ('ண' முதலிய) எழுத்துக்களையும், விரைவில் எழுதுகையில் ஒத்த எழுத்து போல் தோற்றமளிக்கும் எழுத்துக்களையும் (ல, வ) விரைந்து எழுதுகையில் அமையும் வடிவங்களுக்கேற்பச் சில மாற்றங்களைச் செய்துள்ளனர். அவைதாம் 'சீர்திருத்த எழுத்துமுறை' என நாம் இப்பொழுது பின்பற்றுவதற்கு முன் இருந்த வரி வடிவங்கள். அவ்வடிவங்களுக்குரிய குறியீட்டு முறைகள் வருமாறு :-

1) அகர வரிசை : மெய்யெழுத்தின் புள்ளியை நீக்குதல். எவ்வகை இடரும் இல்லை; உள்ளவாறே அமைந்துள்ளன.

2) ஆகார வரிசை : கால் (ா) குறியீடு எழுத்தின் பின் சேர்க்கப்படுகிறது. 'னா' விரைவாகச் சேர்த்து எழுதுகையில் 'ணா' போல் தோன்றுவது முதலிய நேர்வுகளை உணர்ந்து ண, ன, உடன் கீழ்ப்பிறை (‿) என்னும் குறியீட்டைப் பயன்படுத்தியுள்ளனர். (ணா, னா)

இவைபோல் கையெழுத்து வடிவில் 'நா, றா' வேறுபடுத்த 'ற' உடன் 'கால்' சேர்க்காமல் கீழ்ப்பிறை சேர்த்துள்ளனர். (றா)

3) 'இ' கரத்திற்கு 'மேல் விலங்கு' (ி) என்ற குறியீடும், 'ஈ' காரத்திற்கு சுழி மேல் விலங்கு (ீ) என்னும் குறியீடும் தலைப் பக்கத்தில் அமைவதால் தோற்றப் பிழை எதுவும் நேரவில்லை.

4) 'எ' கரத்திற்கு முன்கொம்பும் (ெ), 'ஏ' காரத்திற்கு முன்சுழிக் கொம்பும் (ே) எழுத்தின் முன் அமைந்துள்ளன. வளைத்துத் தொடங்கும் இக்குறியீடுகள் எழுதுவதற்கு வாகாக எழுத்தின் முன்புறம் அமைந்துள்ளன.

5) 'ஐ' காரத்திற்கு முன்இணைக்கொம்பு (ை) குறியீட்டைப் பயன்படுத்தி விரைவாக எழுதுகையில் லை, வை, தோற்ற

வேறுபாட்டை உணர்த்த ண, ல, ள, ன ஆகிய வடிவங்களுக்கு முன்வளைதலைக்கீற்று (ெ) எழுத்தின் முன் சேர்க்கப்பட்டுள்ளது.

6) 'ஒ' கர, 'ஓ' காரங்களுக்கு முறையே முன்கொம்பு, முன்சுழிக் கொம்புடன் எழுத்தின் பின் 'ஆ'காரத்திற்குரிய குறியீடான 'கால்' (ா) சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைகையில் 'ஆ' காரத்தில் கீழ்ப்பிறை இடப்பட்ட எழுத்து வடிவங்கள் (ணா, றா, னா) அவ்வாறே அமைந்துள்ளன.

7) 'ஔ'காரத்திற்கு 'ஔ' எழுத்தில் உள்ள கொம்புக்கால் (ள) எழுத்தின் பின்னரும், ('ஔ'வின் ஒரு பகுதிபோல் தோன்றும்) முன்கொம்பு முன்னரும் அமைந்துள்ளன. (முன்கொம்பு பின்கொம்புக்கால் - கௌ)


கல்வெட்டில் 'ஆறாயிரத்து' என 'ற' எழுத்துடன் காலிட்டு எழுதும் முறை இருந்ததைக் கல்வெட்டுக் கலைச் சொல் அகர முதலி (மதுரை காமராசர் பல்கலைக் கழக வெளியீடு) எடுத்து இயம்பியுள்ளது.

'இதன் அடிப்படையில் பலரின் கையெழுத்து வடிவங்களைப் பார்க்கும் பொழுது இந்த எழுத்தா? அந்த எழுத்தா?' என ஐயம் நேர்வதைக் கண்டு உய்த்து உணர்ந்தால், தமிழ் வரி வடிவ அமைப்பில் கீழ்ப்பிறையும் முன்வளைதலைக் கீற்றும் - எழுத்தை, அழகின்றியும் விரைந்தும் எழுதித் தோற்றப் பிழையை உருவாக்கிய காலத்தில் இரண்டாம் நிலையிலே தோன்றியிருக்க வேண்டும் என்பது புலனாகும்.

தொன்மைக் காலத்திலேயே இத்தகைய வடிவ மாற்றத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் பொழுது இப்பொழுது வேறு வடிவ மாற்றத்தை ஏற்றுக் கொண்டால் என்னவென்று சிலர் கேட்கலாம். எழுத்தின் வடிவு ஒத்து எழுதும் போக்கில் அமைந்த மாற்றம் இது. ஆனால், இப்பொழுது கூறுவோர் துன்புறுத்தி இன்பம் காணும் உளப் போக்கினரைப் போன்று எழுத்தைச் சிதைத்துத் தம்மை அறிஞர்களாகக் காட்டிக் கொள்பவர் (இவர்களின் மயக்கத்தில் ஆழ்ந்த உண்மைத் தமிழ் அறிஞர்கள் விரைவில் விழித்தெழு வார்களாக!) மேலும், இவ்வாறு வந்த கீழ்ப்பிறையும், முன்வளைதலைக் கீற்றும் நீக்கப்பட்டு முந்தைய வடிவமே நிலைத்துவிட்டதால், மீண்டும் எவ்வகை மாற்றமும் தேவையில்லை எனத் தெள்ளிதின் உணரலாம்.

8) பலராலும் சீராக இல்லை எனக் கருதப்படுகின்ற 'உ'கர, 'ஊ'கார உயிர் மெய் வரி வடிவிற்கான குறியீடுகளும் எழுதுவதற்கு இயைந்த அறிவியல் முறையிலான சீரான வடிவங்களேயாகும்.

'உ'கரத்தின் அடிப்படை உயிர் மெய்க் குறியீடு 'கீற்று' என்பதாகும். இக்கீற்று எழுத்தோடு பொருந்தி வருகையில் (ஙு, சு, பு, யு, வு) இறங்கு கீற்று (ᛁ) பயன்படுத்தப்படுகின்றது. பிற இடங்களில் எழுத்தோடு இயைந்து வரும் வகையில் மடக்கேறு கீற்றும் (ஞு, ணு, து, நு, று, லு, னு) கீழ் விலங்கு கீற்றும் (கு, டு, மு, ரு, ழு, ளு) பயன்படுத்தப்படுகின்றன. இதற்கேற்றாற்போல் ஊகாரத்தில் மடக்கேறுகீற்று வரும் இடங்களில் அவற்றிற்குப் பொருந்திவரும் 'கால்' இணைந்து மடக்கேறுகீற்றுக்காலும் (நூ, ணூ, தூ, லூ, னூ) கீழ் விலங்கு அமையும் இடங்களில் அவற்றிற்கு இயைபான சுழியும் (டூ, மூ. ரூ, ழூ, ளூ) இறங்கு கீற்று வரும் இடங்களில் அவற்றிற்கு இயைபான (இறங்கு கீற்றுக்) கீழ்விலங்குச் சுழியும் (ஙூ, சூ, பூ, யூ, வூ) இடப்பட்டுள்ளன. க் + உ சேருகையில் இறங்கு கீற்று பயன்படுத்தினால் 'த' போல் தோன்றுவதாலும் மடக்கேறுகீற்று பயன்படுத்தினால் 'து' போல் தோன்றுவதாலும் கீழ் விலங்கு (கு) பயன்படுத்தியுள்ளனர். எனவே க் + ஊ வடிவிற்கு உயிர் வடிவோடு ஒத்துவரும் வகையில் பின்வளைத்தலைக்கீற்று (கூ) இடப்பட்டுள்ளது. பின்வரும் விளக்கப்படம் இதனை நன்கு விளக்கும்.



இதைப் போல்தான் ஒவ்வொரு வடிவமும் - குறியீடு சேர்த்து எழுதப்படும் பொழுது - மற்றோர் எழுத்தென ஐயம் நேரக்கூடிய வாய்ப்புகளைத் தவிர்க்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய அறிவியல் உண்மையைப் புரிந்து கொள்ளாமல் எழுத்து வடிவைக் குலைக்க என்னும் அனைவரும் உகர, ஊகார உயிர் மெய் வடிவம் சரியில்லை எனக் கூறிச் சிதைக்க வலியுறுத்துகின்றனர்.

மேலும், 26 ஆங்கில எழுத்துகளையும், நால்வகையாக எழுதும் பொழுது (26 x 4 = 104) வரி வடிவங்கள் ஆகின்றன. இவைதவிர 'பெரிய' எழுத்து 'சின்ன' எழுத்து என்ற வகைப்பாடு; ஒரே ஆங்கிலச் சொல்லே வெவ்வேறு வகையாக ஒலிக்கப்பட்டு பல எழுத்துக்களுக்கு ஒலி வடிவம் இல்லாமல் போதல்; சில ஒலி வடிவங்களுக்கு வரிவடிவமே இல்லை;முதலியன பற்றியெல்லாம் ஆங்கிலேயர்கள் கவலைப்படாமல் வளர்ச்சி குறித்து மட்டுமே கருத்து செலுத்துகிறார்கள். ஆனால், இங்கோ ஆக்க முறைகளில் அறிவைச் செலுத்தாமல் அழிவுப் பாதையில் செலுத்தத் துடிப்போர் இருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

அத்துடன் ஆங்கிலத்தைப் பற்றி நாம் அறிவோம் என்பதால் அதனுடன் ஒப்பிடவில்லை. நமக்குத் தெரியாத ஒன்றைக் கூறி அச்சுறுத்தி நம்மை அடிமைப்பட வைப்பதுதான் காலம் காலமாக நடக்கின்றது. அதைப் போன்று, 'சப்பானிய மொழியில் மாற்றம்'' எனக்கூறி வயப்படுத்தும் முயற்சியும் நடைபெறுகிறது.

சப்பானிய மொழியில் எழுதும் முறையில் மாற்றம் செய்து படுக்கையாக இடப்புறமிருந்து எழுதுவதாகக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் தவறான கருத்தாகும். சப்பானியர்கள் தங்கள் மொழியை எழுதும் முறையில் எவ்வகையான மாற்றத்தையும் கொணரவில்லை. ஆனால், அயல் மொழியினர் படிப்பதற்குரிய நூல்களில் மட்டும் வலப்புறத்தில் தொடங்கி மேலிருந்து கீழாக எழுதாமல் உலகப் பெரும்பான்மை வழக்கத்திற்கிணங்க இடப்புறமிருந்து எழுதும் வகையில் அச்சிட்டுள்ளனர். ஆனால், அயல் மொழியினர் சப்பானிய முறைப்படி எழுதும்பொழுதுதான் அம்மொழியில் முழுமையாகத் தேர்ச்சி பெற்றதாகக் கருதப்படுவர். இவ்வாறு எழுதக்கூடியதை, இடமிருந்து வலமா அல்லது மேலிருந்து கீழா என நோக்குவது எழுத்து வரி வடிவத்தை மாற்றுவதற்கு தொடர்பற்ற ஒன்று. சப்பானியர்கள்

சீன எழுத்தான பட எழுத்து முறையான கஞ்சியையும் பயன்படுத்தி வருகின்றனர். இடையிடையே குறிப்பதற்கு 'இரங்கன' எனும் சப்பானிய வரிவடிவத்தையும் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், சப்பானிய மொழியில் அயற்சொற்களைக் கையாளும் பொழுது 'கதகன' எனும் வரி வடிவத்தையும் பயன்படுத்துகின்றனர் என்றும் இவ்வாறு ஆயிரக்கணக்கில் பட எழுத்துக்களும் நூற்றுக்கு மேற்பட்ட வரி எழுத்துக்களும் இருப்பினும் அ, இ, உ, எ, ஒ என்ற தமிழ் உயிரொலி வடிவமும் தமிழ் மெய்யொலி வடிவமும் உடைய - தமிழில் இருந்து உருவான - சப்பானிய மொழியில் எழுத்துச் சீரமைவு என்ற பெயரில் மொழிக் கொலையில் யாரும் ஈடுபடவில்லை.

சப்பானிய தட்டச்சில் மூன்று அடுக்கு முறையைப் பின்பற்றி முதல் பகுதியில் 1850 பட ..முத்துக்களும், இரங்கன, கதகன எழுத்துகள், கூட்டல், கழித்தல் போன்ற குறியீடுகள் ஆகியவை புள்ளிட்ட 351-ம் சேர்ந்து ஆக மொத்தம் 2201 வடிவங்கள் உள்ளன. இதை அடுத்த இரண்டாவது அடுக்கில் 858 கஞ்சிகளும் மூன்றாவது அடுக்கில் 2297 கஞ்சிகளும் உள்ளன. ஆக மொத்தம் 5356 வடிவங்கள் இருக்கின்றன என்பதற்காக மொழி வடிவைச் சிதைப்பதற்கு அவர்கள் முன்வரவில்லை. மாறாக, அறிவியலைப் பயன்படுத்தி கணினி அச்சைப் பயன்படுத்தி வருகின்றனர். இதே போல் சீனாவிலும் எழுத்துகளைக் குறைத்ததாகக் குறிப்பிட்டிருப்பதும் தவறான தகவலே ஆகும். சீனாவிலும், சப்பானிலும் பட எழுத்துகளே சொல்லாக அமைந்து இருக்கின்ற காரணத்தினால் எந்தெந்த நிலைக்கு எத்தனைச் சொற்கள் பயில வேண்டும் என்ற வரையறை செய்துள்ளனர். அதன் அடிப்படையில்தான் அடிப்படைக் கல்வி கற்பதற்கு சப்பானில் 1850 பட எழுத்துக்களும், சீனாவில் 2236 பட எழுத்துக்களும் அறிய வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. நம் பாடத் திட்டங்களில் சொற்றொகுதி (வொகபுலரி) என்ற பெயரில் இத்தனைச் சொற்கள் அறிய வேண்டும் என வரையறுப்பதைப் போல் வரையறுத்த முறையைக் குறியீடுகளைக் குறைத்ததாகக் கூறுவது தானும் ஏமாந்து பிறரையும் திசை திருப்புவதாகும்.

'வரி வடிவமே மொழி அன்று' எனக் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு தமிழில் வரி வடிவ மாற்றம் மொழியைச் சிதைக்காது எனத் தவறாக உணர்ந்ததால்தான் சமசுகிருத சொற்களைக்

குறிக்க கிரந்த எழுத்துகள் தோன்றின. அதன் அடிப்படையில் பல அயற்சொற்கள் புகுந்தன. இவ்வாறு அயற்சொற்கள் புகுந்த அளவு, தன்மை, இடம் ஆகியவற்றின் அடிப்படையிலும், சூழல்களுக்கேற்ப புதிய வரி வடிவங்களை அறிமுகப்படுத்தியதன் அடிப்படையிலும் கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற பல மொழிகள் உருவாகி நம் பரப்பளவும் சுருங்கி சிதைந்து போயிருக்கிறது. இதற்கு மேலும் அவ்வாறு வரி வடிவம் வேண்டும் என்போரை, தமிழகத்தில் மேலும் சிதைவை உருவாக்குவதையே உள்நோக்கமாகக் கொண்டவர்களாகத்தான் எண்ண வேண்டி வரும். இதனை உணராமல், 'அறிஞர்கள் கருத்து சரியாகத்தான் இருக்கும்' என்று தவறாக எண்ணி வரி வடிவச் சிதைவை வரவேற்கும் பலரும் இனிமேலேனும் தமிழ் வரி வடிவைக் காக்க முன் வருவார்களாக!

'ஒரு மொழி பொருளாதார தேவையில்லாத நாட்டில் இளைஞர் தலைமுறை அதைக் கற்க முடியாது' எனக் கட்டுரையாளர் பிற கட்டுரைகளில் கூறுவது போல் இங்கும் கூறியுள்ளார். இவை உள்ளத்திலிருந்து வந்தவையாய் இருப்பின் உலகெங்கும் உள்ள தமிழர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது வரி வடிவம் அல்ல என்பதை உணர்ந்து - பெயரளவில் இல்லாமல் உள்ளபடியே அனைத்து நிலைகளிலும் தமிழ் கற்கவும் தமிழின் முதன்மையை உணர்ந்து அனைவரும் வாழவும் - தமிழைச் சார்ந்து இருக்கும் வகைகளில் கல்வி, வேலைவாய்ப்பு, இறை வழிபாடு, வணங்கும் முறைகள் ஆகியவை இருக்கும்படி செய்ய ஒல்லும் வகை பணியாற்ற முன் வரவேண்டும்.

அக்கட்டுரையில் குறியீடுகளின் வடிவம் அடிப்படைச் சிக்கல் அல்ல என்று குறிப்பிட்டு குறியீடுகளைக் குறைப்பதை ஒப்புக் கொள்வதுதான் கொள்கை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இவர்களைப் போன்ற சிலர் கூறுவதன் காரணம் குறியீடுகளைக் குறைக்க ஒப்புக் கொண்டால் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனத் தாம் கூறும் வரி வடிவச் சீரமைவை ஏற்றுக் கொள்ளச் செய்யலாம் என்பதுதான். ('பெரியார் எழுத்து' என்பது போல் 'தாத்தா எழுத்து' எனப் பெயர் வந்தால் பெருமைதானே!) ஆனால், நமது குறிக்கோள் எத்தகைய வரி வடிவ மாற்றத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்பது அல்ல. அவ்வாறு வரி வடிவ மாற்றமே கூடாது என்பதுதான்.

கக

தமிழ் வரி வடிவங்கள் இரு கோட்டில் அடங்கவில்லை என்று கட்டுரையாளர் அவ்வப்பொழுது ஒரு பூதத்தைக் கிளப்பி வருகிறார். ஆண்டாண்டு காலமாகக் கல்விக் கூடங்களில் தமிழ் எழுதுவதற்கு இருகோடு ஏடுகளையும், ஆங்கிலம் எழுதுவதற்கு நான்கு கோடு ஏடுகளையும் பயன்படுத்தி வரும்பொழுது இது எத்தகைய புரட்டு என்பது புரிய வரும்.

சீன மொழி, சப்பானிய மொழி போன்ற பட வடிவுடைய மொழியினர், குழந்தைகளால் எழுத இயலாது எனக் கூறி எழுத்து வடிவைச் சிதைப்பது இல்லை. எவ்வாறு எழுத வேண்டும் என்னும் படி முறையை உணர்த்திக் கற்பிக்கின்றனர். இதனால் 'மாவுக் கோலத்தை விரைவாகப் போடும் தமிழ்ப் பெண்களைவிட' விரைவாக எழுதுகின்றனர். சான்றுக்கு இணைப்பில் சப்பானிய வரி வடிவமும் எழுது முறையும் கொடுக்கப்பட்டுள்ளது.


முப்பதுக்கும் மேற்பட்ட வரிகளையும் வளைவுகளையும் கொண்டு எழுத்துகள் இருப்பினும் இங்கு தொடக்க நிலைப் பயன்பாட்டிற்குரிய எழுத்து வடிவங்களே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய எழுதும் முறையை அறிந்த பின்னரும் தமிழ் நலம் நாடும் நடுநிலை கொண்ட மொழிக் காவலர் யாரும், தமிழ் வரி வடிவச் சீரமைப்பு என்ற பெயரில் சீரழிவை இனியேனும் உருவாக்க முன் வரமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

தினமணியைச் செய்தியிதழாக மட்டும் இல்லாமல் இலக்கிய இதழாகவும் மாற்றும் முயற்சிகளில் *தீபம் நா.பார்த்தசாரதி* முதற்கொண்டு ஒவ்வோர் ஆசிரியரும் முயன்று வந்துள்ளனர். இவர்களில் யாருக்கும் தாம் சளைத்தவரல்ல எனச் செயல்படுபவர் ஆசிரியராக இருக்கும்பொழுது '*தினமணி*' குலோத்துங்களின் படைப்புகளில் மயங்கிப் பொழுது போக்கலாம்; ஆனால், கட்டுரையாளரின் தாலாட்டில் உறங்கித் தமிழுக்கு எதிரான சிதைவு முயற்சியை எதிர்க்காமல் விட்டு விடக்கூடாது!

இனியேனும் கலையட்டும் தூக்கம்!

- முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

சப்பானிய வரி வடிவங்கள் (கஞ்சி) சில ❊



❊ எழுத்து அமைவு கோடுகளைச் சேர்க்கும் வரிசைமுறையில் விளக்கப்பட்டுள்ளன

சப்பானிய வரி வடிவங்கள் (கஞ்சி) சில ❊



❊ எழுத்து அமைவு கோடுகளைச் சேர்க்கும் வரிசைமுறையில் விளக்கப்பட்டுள்ளன

அடுத்து வருவன

- சொல்லாக்கப் பாதை
- கணினியியல் கலைச்சொற்கள்
- இதழியல் அறிஞர் இலக்குவனார்